செய்தி இதழாகப் பதிவு பெற்றது


# தந்தி

விசேஷ பதிப்பு

இல: 774 1969 ஜூலை 19 சனிக்கிழமை ★ ★ ★ விலை சதம் 5

## அமெரிக்காவுக்கு ரஷ்யா உறுதி

# அப்பலோவுக்கு லூனு தொல்லை கொடுக்காது



"அப்பலோ—11"-ல் சென்று சந்திரனில் இறங்கும் விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங் தனது இரு கைகளிலும் தேவையான உபகரணங்களுடன் இவ்வாறு அடி எடுத்து வைப்பார். அவர் சென்று இறங்கும் வான ரதம் அருகில் நிறுத்தப்பட்டுள்ளது. (ல)

—ஹூஸ்டன், ஜூலை 18

**ரஷ்யாவின் "லூனு-15" அமெரிக்காவின் "அப்பலோ-11"க்கு எவ்வித தொல்லையும் அளிக்காது என இன்று சோவியத் ரஷ்யா அமெரிக்காவுக்கு உறுதி அளித்தது.**

அமெரிக்காவின் "அப்பல்லோ-8" விண் வெளி வீரரான பிராங் போர்மனுக்கு (கடந்த டிசம்பரில் விண் வெளிக்குச் சென்றவர்) சோவியத் அரசாங்கத்தினுல் அனுப்பப்பட்டுள்ள தந்தியில் இத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விஷயத்தைப் பற்றி தனக்கு அறிவிக்கும்படி நேற்று கேர்னல் போர்மன் ரஷ்யாவுக்கு டெலிபோன் செய்திருந்தார். அதற்குப் பதிலாகவே ரஷ்யா இத் தகவலை அறிவித்தது. இனிமேல் ஏதும் மாற்றங்கள் இருந்தால் தாங்கள் தொடர்ந்து அறிவிப்பதாக ரஷ்யா கூறியிருக்கிறது.

இது இவ்வாறிருக்க, ஜொட்ரல் பேங் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து லூனு—15 சம்பந்தமான தகவல்கள் ஹூஸ்டனுக்கு ஒலிபரப்பப்பட்டன.

அப்பலோ - 11 இறங்க திட்டமிட்டிருக்கும் சந்திரனின் மேற்பரப்பு பகுதியிலிருந்து வெகு தூரத்தில் லூனு - 15 இப்போது சந்திரனை சுற்றிக் கொண்டிருப்பதாக ஜொட்ரல் பேங் கண்டுபிடித்துள்ளது.

தற்போது சந்திரனைச் சுற்றி வரும் "லூனு" விண்வெளிக் கலத்தை எப்படியேனும் சந்திரனின் மேற்பரப்பில் இறக்குவதற்கு ரஷ்யர்கள் முயலலாம் என நம்பக் கூடியதாக இருப்பதோடு, லூனு சந்திரனில் இறக்கப்படும் நேரத்தை நிச்சயமாக கூற முடியாதிருப்பதாக பிரிட்டிஷ் விஞ்ஞானி சேர். பெர்னுட் லொவல் இன்று கூறினர்.

இதற்கிடையில் அமெரிக்காவின் அப்பலோ - 11" குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே இன்று சந்திர மண்டலத்துள் பிரவேசிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அப்பலோ - 11 சந்திரனை நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில் இன்று காலை மூன்று விண்வெளி வீரர்களும் சுகமாக தூங்கிக் கொண்டிருந்தனர். குறிப்பிட்ட நேரத்தில் மூன்று விண்வெளி வீரர்களும் எழும்ப வேண்டி இருந்த போதிலும், அவர்களின் இருதயத் துடிப்பை அவதானித்த பூமியிலிருக்கும் டாக்டர்கள், விண்வெளி வீரர்கள் தொடர்ந்து தூங்கட்டும் எனத் தெரிவித்ததை அடுத்து கட்டுப்பாட்டு நிலையம் அவர்களை நித்திரையிலிருந்து எழுப்பாது விட்டது.

விண்வெளி வீரர்கள் மூவரும் இன்று காலை நித்திரையைவிட்டு எழுந்தபோது, சோவியத் ரஷ்யாவின் லூனு - 15 சந்திரனை வலம் வருவது பற்றி அவர்களிடம் அறிவிக்கப்பட்டது. அப்போது அவர்களில் ஒருவராவது எதுவும் பேசவில்லை.

எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றதா என்பதை அவதானிப்பதற்காக நாளை விடியற்காலை 3-17 மணிக்கு ஆம்ஸ்ட்ரோங்கும் ஆல்ட்றினும் சந்திர ரதத்தினுள் நுழைவர். 4-52 மணிக்கு மீண்டும் தாய்க் கலத்துக்கு திரும்பி வருவர்.

இலங்கை நேரப்படி இன்றிரவு 10.56 மணிக்கு அப்பலோ - 11 சந்திர மண்டலத்துள் பிரவேசிக்கும். (ல)

## மொரார்ஜி—இந்திரா ஒருமணி நேர சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 18

காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையைத் தீர்க்கும் முகமாக பிரதமர் திருமதி இந்திரா காந்தி முன்னுள் நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாயை இன்று சந்தித்தார்.

நிதி மந்திரிப் பதவி தனக்கு அளிக்கப்படாததை அடுத்து திரு. தேசாய் உதவிப் பிரதமர் பதவியிலிருந்து கடந்த புதன்கிழமை ராஜினுமா செய்தார்.

கடந்த வாரம் பெங்களூரில் நடைபெற்ற விவாதங்கள் மிகுந்த காங்கிரஸ் கட்சி மகாநாட்டுக்குப் பின் திருமதி காந்தியும் மொரார்ஜியும் முதன் முதலாக இன்று சந்தித்தனர்.

திரு. தேசாய் உதவிப் பிரதமராக தொடர்ந்து இருக்க விரும்பினுல் நிதி மந்திரிப் பதவிக்குப் பதிலாக அவருக்கு உள்நாட்டு மந்திரிப் பதவியை அளிக்க திருமதி காந்தி இணங்குவார் என இந்திய பத்திரிகைகள் இன்று கருத்து வெளியிட்டன. ஆனுல் அப்படி நடக்கும் பட்சத்தில் இப்போதிருக்கும் உள்நாட்டு மந்திரி திரு. வை. சவானுக்கு என்ன பதவி கிடைக்கும் என்பதைப் பற்றி பத்திரிகைகள் ஒன்றும் குறிப்பிடவில்லை. பிரதமர்—தேசாய் இன்றைய சந்திப்புக்கு சகல ஏற்பாடுகளையும் செய்தவர் திரு. சவான் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

திருமதி காந்தியுடன் நடைபெற்ற ஒரு மணிநேர சந்திப்பின் பின்னர் திரு. தேசாய், காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கே. நிஜலிங்கப்பாவின் வீட்டுக்கு காரில் சென்முர். அப்போது பத்திரிகை நிருபர்கள் அவரின் காரை நிறுத்தி திருமதி காந்தியுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் பற்றி ஏதாவது கூற இருக்கிறதா எனக் கேட்டனர். "அதைப் பற்றி அவரையே போய்க் கேளுங்கள்" என திரு. தேசாய் பதிலிறுத்தார். "பிரதமரை இனி சந்திப்பீர்களா?" என பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது "இல்லை" என அவர் கூறினுர். (ல)

## ரஷ்யாவில் அப்பல்லோ

மாஸ்கோ, ஜூலை 18

அமெரிக்க அப்பல்லோ-11 குறித்து ரஷ்யப் பத்திரிகைகள் நேற்று பிரபலமாகப் பிரசுரித்திருந்தன. ஆனுல் தங்கள் சொந்த லூனர் 15 பற்றி மௌனம் அனுஷ்டித்தன.

கம்யூனிஸ்ட் பத்திரிகை பிராவ்டா முதல் பக்கத்தில் கேப் கென்னடி காட்சிகளைப் பிரசுரித்திருந்தது.

## மீனுட்சி



இருபத்தி நாலு மணித்தியாலமும் வேலை செய்ய வேண்டியிருக்கும் கிராம சேவகர்கள் எப்படிச் சிங்களம் படிப்பது?

மாணவர்களாக ஒரு காலத்தில் இருந்தவர்களுக்கு இது தெரியாதா — சற்றே டிமிக்கி கொடுப்பது தான்!

நாளை (20 - 7 - 69) "தந்தி" எட்டுப் பக்கங்களுடன் வெளிவரும். விலையில் மாற்றமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆண்களுக்கு இன்ப விருந்தளித்தாராம்

# மருந்து வாங்கப் போய் விபசாரியானாள் யுவதி

## கண்ணீர் விட்டபடியே கூறிய சோகக் கதை

இதுபோன்ற ஒரு ஆபத்து எனக்கு ஏற்படும் என்று நான் கனவில்கூட நினைத்தது கிடையாது. அன்று நான் களுபோவில ஆஸ்பத்திரிக்கு காலில் இருந்த வருத்தத்துக்கு மருந்து எடுக்கச் சென்றேன். அங்கு என்னைக் கண்ட எதிரியான இப்பெண் என்னை தனது வீட்டுக்கு கூட்டிச் சென்றார். அங்கு ஒன்பது நாட்கள் பலவந்தமாக தடுக்கப்பட்டிருந்தேன். அந்த ஒன்பது நாட்களிலும் 25-க்கு மேற்பட்டோருக்கு பருவ விருந்தளித்தேன். இச் சம்பவத்துக்கு முன்னர் நான் கன்னியாகவே இருந்தேன்.

கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட 18 வயதுடைய யுவதி தென் கொழும்பு நீதிமன்றத்தில் கூறிய சோகக் கதையின் ஆரம்பம் இது வாகும்.

ஒரு யுவதியை பலவந்தமாக விபசார தொழிலில் ஈடுபடுத்தியதாக குங்கொடவிலையைச் சேர்ந்த எச். ஏ. குணவதி என்னும் பெண்மீது மிரிஹான பொலீஸாரால் தொடரப்பட்ட வழக்கில் அந்த யுவதி சாட்சியமளித்தார்.

வழக்கு விசாரணை ஆரம்பமான போது பொலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:— பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த வாதியான யுவதி பொலீஸில் செய்த முறைப்பாட்டில் எதிரி தன்னை பலவந்தமாக தனது வீட்டில் ஒன்பது நாளாக தடுத்து வைத்ததாகவும் இந்த ஒன்பது நாட்களிலும் 25-க்கு மேற்பட்ட ஆண்கள் தன்னுடன் உடலுறவு கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த யுவதியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவருக்கு சமூக நோய் பீடிக்கப்பட்டிருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து சாட்சியமளிக்க சமலின் என்னும் யுவதி அழைக்கப்பட்டார். அவர் கூறியதாவது:— "கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி களுபோவில ஆஸ்பத்திரிக்கு மருந்து எடுக்க வந்தேன். அங்கு என்னைக் கண்ட எதிரி, "தங்கச்சி போவோமா படம் பார்க்க" என்று கேட்டார். நான் விரும்பாத போதிலும் அவர் பாமன் கடைக்கு என்னைப் படம் பார்க்க கூட்டிச் சென்றார், பின்னர் தனது வீட்டுக்கு கூப்பிட்டார், விரைவில் திரும்பிவிடும் நோக்கத்துடன் அங்கு சென்ற போதிலும் எதிரி என்னை வெளியில் செல்லவிடவில்லை.

அங்கிருந்த ஒன்பது நாட்களிலும் 25-க்கு மேற்பட்ட ஆண்களினால் நான் கெடுக்கப்பட்டேன், அந்த வீட்டிலிருந்து தப்பி வந்த நான், நடந்ததை அம்மாவிடம் கூறி பொலீஸுக்குச் சென்று முறையிட்டேன்."

நீதவான் மேல் விசாரணையை ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ர)

## கிராமசபை உறுப்பினர் இருவர் ராஜினாமா

கந்தளாய், ஜூலை, 18

தம்பலகமம் கிராமச் சபைத் தேர்தலில் கூட்டாம்புளி அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்ட திரு. தா. சற்குணராஜாவும், பட்டிமேடு அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்ட மூன்றாள் தலைவரான திரு. சு. வேலுப்பிள்ளையும் தமது உறுப்பினர்கள் பதவியை திடீரென இராஜினாமாச் செய்துள்ளனர். (141)

## பெரடைஸ் பிளேஸ் சம்பவ சந்தேக நபர் ரிமான்டில்

கொழும்பு, பெரடைஸ் மாவத்தையில் சட்ட விரோதமாக கூட்டம் கூடி வாள், தடி, மண் போத்தல், கைக்குண்டு ஆகியவற்றைக் கொண்டு கடை சாப்புகளுக்கு சேதம் விளைவித்த சம்பவம் சம்பந்தமாக கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட ஒருவர் 26ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப் பட்டார்.

மாளிகாவத்தையைச் சேர்ந்த சாஹுல் ஹமீது எனப்படும் இந் நபர் சந்தேகத்தின் பேரில் பொலீசாரால் கைது செய்யப் பட்டிருந்தார்.

சந்தேக நபரை நீதி மன்றத்தில் ஆஜர் செய்த கொட்டாஞ்சேனை பொலீசார் கூறியதாவது:— ஜூலை மாதம் 15ம் திகதி, சாஹுல் ஹமீது, ஜப்பார், அன்வர், நிஸான் ஆகியோர் வாள், பொல்லு, கைக்குண்டு ஆகியவற்றால் கடை சாப்புகளை தாக்கியுள்ளனர். இச் சம்பவம் பற்றி பொலீசார் தொடர்ந்து விசாரணை செய்து வருவதால் அந்த விசாரணை முடியும் வரை சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்க வேண்டும்.

பொலீசாரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதவான், சந்தேக நபரை இம்மாதம் 26ம் திகதி வரை விளக்க மறியலில் வைத்தார். (ர)

## நகை வியாபாரி கொலை வழக்கு மேல் விசாரணை

திருகோணமலை, ஜூலை. 18

திருகோணமலை நகை வியாபாரி கொலைவழக்கு உயர்நீதிமன்ற விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்டது.

பிரபல நகை வியாபாரியான வி. பி. முகமது அலி சாயபுவை கொலை செய்ததாக கனகசபை சிவயோகம் என்ற இளைஞன் மீது திருமலை பொலீஸார் குற்றஞ்சாட்டி இருந்தனர்.

இவ்வழக்கு திருமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யூ. விக்கிரமசேகரா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்பொழுது சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு இவ்வழக்கை பாரப்படுத்துவதாக நீதவான் அறிவித்தார்.

எதிரி சம்பவம் நடைபெற்ற தினம் காலஞ்சென்றவரின் நகைக் கடையில் வேலை செய்து வந்தார் என்று பிராஸிகியூஷன் தரப்பில் கூறப்பட்டது.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் இரா. சம்பந்தன் ஆஜரானார். (287)

## ஜனாதிபதி லடாய்

மாந்தருள் மாணிக்கமாக மிளிர்ந்த அன்றைய பாரதப் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்கள் வகுத்த சோஷலிசத்திற்கும் கனரகக் கைத்தொழில் ஆதிபத்தியத்துக்கும் உள்ள போட்டியே இன்று இந்திய ஜனாதிபதித் தேர்தலில் பெருத்த லடாயாக உருவெடுத்துள்ளது. ஸ்ரீமதி இந்திரா காந்திக்கும், ஸ்ரீ மொராஜி தேசாய்க்கும் உள்ள கருத்து வேற்றுமையும் இதுவே. தந்தை வழியைப் பின்பற்றுகிறார் ஸ்ரீமதி இந்திரா காந்தி. அவருக்குப் பக்க பலமாக நிற்கின்றார் ஸ்ரீ காமராஜ் நாடார். கனரகக் கைத்தொழில் ஆதிபத்தியத்தின் தூணாக விளங்குகின்றார் ஸ்ரீ மொராஜி தேசாய். பாரத நாட்டு அரசியலில் ஆரம்பத்தில் அகோரமான பூசல்களின் பின்னர், சமாதானப் பேச்சுவார்த்தைகள் நிகழ்வதும், சாந்தமும், சந்துஷ்டியும், நிதானமும் இறுதியில் நிலவுவதும் சர்வசகஜம். அத்தகைய ஒன்று இப்பிரச்சினையிலும் நிகழுமாயின் யாவருக்கும் நன்மை உண்டு. காந்தி மகான் வளர்த்த காங்கிரசும் பக்கவேர் பெயராது.

தந்தி

## மாவை திருவிழா சுமுகமாக நடக்க பொலீஸார் உதவி

மாவிட்டபுரத்தில் எந்த ஒரு கலவரத்தையும் தூண்ட முயலுவோரர் மீது பொலீசார் கடுமையான நடவடிக்கை எடுப்பர். மாவிட்டபுரம் ஆலயதின் திருவிழா இன்று ஆரம்பமாகும்.

ஆலய நிர்வாகிகளுக்கும் ஹரிஜன தலைவர்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒரு உடன்படிக்கையின் விதிகளின்படி இவ்வருட திருவிழா நடைபெறும். ஆனால், உடன்படிக்கையின் சில பிரிவுகள் "தந்திரமானவை" என்றும் அவை அமுல் படுத்தப்படும் போது பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம் என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த உடன்படிக்கையின் கீழ் யாரும் தடையாக நிற்க கோயில் நிர்வாகிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அப்படி அவர்கள் செய்தால் அத் தடையை அகற்ற பொலீசாருக்கு அதிகாரம் இருக்கின்றது. அதே வேளையில், கோயிலினுள் ஹரிஜனர்கள் அமைதியாகப் பிரவேசிக்க உடன்படிக்கை வழி வகுக்கின்றது. எவ்வாருயினும் ஹரிஜனரின் எந்தவொரு ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் அனுமதிக்கப்பட மாட்டாது.

இது ஹரிஜனர்களுக்கு ஒரு பிரச்சினையை ஏற்படுத்தும் என்று அறியப்படுகிறது. உயர் சாதி இந்துக்களால் தாக்கப் படலாம் என்னும் அச்சத்தால் கோயிலினுள் தனியாக பிரவேசிக்க ஹரிஜனர்கள் அஞ்சுவதாகவும் இக்காரணத்தினால் அவர்கள் பல பேராகச் சேர்ந்து கோயிலில் பிரவேசிக்க தயாராகலாம் என்றும் கருதப் படுகிறது.

இவ்வாறு நடந்தால் அதை ஒரு ஊர்வலமாக கோயில் நிர்வாகிகள் கருதலாம். உடன்படிக்கையை மீறும் இச்செயல் நடந்தால் பொலீசார் இக்கட்டான நிலையை அடைவர். எவ்வாருயினும் கோயில் திருவிழாவை எந்த அசம்பாவிதமும் இன்றி அமைதியாக நடத்துவதை உறுதிப் படுத்துவதே பொலீசாரின் கடமையாகும் என்று பொலீஸ் மாஅதிபர் கூறியுள்ளார். (ர)

## குடிநீர் கேட்டவர் கட்டிலில் தள்ளி கற்பழித்தாராம்!

குருணாகலை, ஜூலை, 18

"தண்ணீர் கொஞ்சம் தரும்படி கேட்டு வீட்டுக்கு வந்த எதிரி எனது கையைப் பிடித்திழுத்துச் சென்று அறையில் இருந்த கட்டிலில் விழுத்தினார், அப்போது நான் எனது பிள்ளை அழுவதாகக் கூறி தப்பிச் செல்ல முயன்றேன். ஆனால் எதிரி பின்னால் வந்து என்னை மீண்டும் கட்டிலுக்கு இழுத்துச் சென்று கிடத்தி கற்பழித்தார்,

குருணாகலை மேலதிக நீதவான் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட கற்பழிப்பு வழக்கொன்றில் பி. வி. அலிஸ்நோனா என்னும் பெண் இவ்வாறு கூறினார். இப் பெண்ணைக் கற்பழித்ததாக ஐ. ஜி. ஹேரத்துவா என்பவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

அப் பெண் மேலும் கூறியதாவது:— சம்பவதினம் கணவர் வீட்டில் இருக்கவில்லை. எதிரி தண்ணீர் கேட்ட போது நான் வீட்டின் உள்ளே செல்லவே எதிரியும் பின்னால் வந்தார். அப்போது வெளியில் செல்லும்படி நான் அவரிடம் [illegible]வே, கத்தியொன்றை வெளியில் [illegible]த்து சப்தமிட்டால் குத்துவ[illegible]க கூறினார்.

முதலாவதாக இழுத்துச் சென்ற அறைக்கே இரண்டாவது தடவையும் இழுத்துச் சென்றார். முதலாவது முறை கற்பழிக்க முயன்ற அதே கட்டிலிலேயே இரண்டாவது தடவையும் கிடத்தினார்."

மேல் விசாரணை இம் மாதம் 22-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ர)

தந்தி
சிறு விளம்பரங்கள்

### விண்ணப்பங்கள்

இலங்கைக் கட்டளைகள் பணியகம் எழுது வினைஞர் தட்டெழுத்தாளர் பதவிக்காக வயது 35 குறைவான க. பொ. த. ப. தேர்வில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். 1969–7–27 திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை கேளுங்கள்.
CENTRAL AGENCIES, 166/10 Kirillapana Avenue, Colombo-5
R. 51821

### மாயாஜாலம்

உங்கள் விஷயம் நிறைவேறிய தற்குப் பிறகு பணம் செலுத்துங்கள். நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக் கொண்டு காதல் பிரச்சினைக்கு இருவரின் பெயரை எழுதினால் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்து வைக்கப்படும். இலவச விபரங்கட்கு எழுதுங்கள். அரசாங்க அனுமதி பெற்ற மாந்திரீகர், நீலன் கந்தசாமி, நித்தம்புவை.
R. 52605

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தங்கையின் காதல் மடல்களை அக்கா எழுதினார்

# தியேட்டரில் மலர்ந்த காதல், முடிவில் துன்பம்!

## வேல் விழா காண வந்த இடத்தில் நடந்ததை இளம் பெண் விபரித்தார்

மத்துகம, ஜூலை 18

"தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருக்கையில் இவர் எனது கையைப் பிடித்து காலை மிதித்தார். இடைவேளையின் போது எனக்கு கடலையும் இனிப்பும் வாங்கி தந்தார். அன்று சினிமா தியேட்டரில் கொண்ட காதல் இன்று நீதிமன்றத்துக்கு வந்துள்ளது. இவர் திருமணமானவர். ஆனாலும் என்னை அனுதையாக்கினார்,"

மத்துகம நீதவான் முன்னிலையில் ஒரு பெண் கூறிய கதை இதுவாகும். ஐ. செல்லம்மா என்னும் இப்பெண் என். பொன்னம்பலம் என்பவரிடமிருந்து தனக்கும் குழந்தைக்கும் ஜீவனாம்சம் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தனது வழக்கறிஞரின் அனுசரணையுடன் செல்லம்மா சாட்சியமளித்ததாவது:— 1967-ம் வருடம் தீபாவளி பண்டிகையின் போது படம் பார்க்க தோழிகளுடன் வந்தேன். இரண்டாம் வகுப்பில் ஒரே வரிசையில் உட்கார்ந்திருந்தோம். கொஞ்ச நேரத்தின் பின்னர் தியேட்டரின் உள்ளே வந்த இந்த எதிர் மனுதார் மேலே பார்த்துவிட்டு எனது ஆசனத்துக்கு அடுத்த ஆசனத்தில் உட்கார்ந்தார்.

படம் ஆரம்பமானதும் அவரது கை எனது கையில்பட ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்தின் பின்னர் என் காலை மிதிக்க ஆரம்பித்தார். இதற்கிடையில் கையைப் பிடித்து நசிக்கவும் செய்தார்.

எதிர் மனுதாரின் வழ:— உமக்கு அவர் கொடுத்த தொல்லையை தோழிகளிடம் கூறவில்லையா?

சாட்சி:— இல்லை. எனக்கு வெட்கமாகவும் பயமாகவும் இருந்தது.

நீதவான்:— பின்னர் என்ன நடந்தது?

சாட்சி:— தியேட்டரை விட்டு வெளியேறும் முன்னர் அவர் ஒரு துண்டு கடுதாசியைக் கொடுத்தார். அது அவரது விலாசமாக இருக்கும் என நான் எண்ணினேன்.

மறுநாள் அவரது விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதினேன். இரண்டு மூன்று நாட்களின் பின்னர் பதிலும் வந்தது. மீண்டும் தியேட்டரில் சந்தித்தோம். பின்னர் என் வீட்டுக்கு வந்த அவர் என்னைத் திருமணம் செய்வதாக தந்தையிடம் உறுதியளித்தார். எமது காதலுக்கு பெற்றோரும் ஆதரவளித்தனர்.

பின்னர் வேல்விழா பார்க்கச் சென்ற போது இவர் தனக்குத் தெரிந்த ஒருவரின் வீட்டுக்கு கூட்டிச் சென்றார். வீட்டில் உள்ளோர் வேல் பார்க்கச் சென்றபோது நாங்கள் இருவரும் செல்லவில்லை. தனியே இருந்த நாங்கள் அன்று முதன் முதலாக கணவன் – மனைவி உறவு கொண்டோம்.

அதன் பின்னர் வீட்டைவிட்டு வெளியே சென்று நாம் அவ்வாறு நடந்து கொள்வோம். சில நாட்களில் அவர் வீட்டுக்கு வந்ததும் நான் வேலைக்குச் செல்ல மாட்டேன். அந்நாட்களில் கணவன் – மனைவி உறவு கொள்வோம். இறுதியில் நான் கர்ப்பமுற்றேன்.

ஒரு வழக்கறிஞர்:— இவர் அக்காவையும் தங்கையையும் தொல்லையில் மாட்டிவிட்டு தப்பிப் போனரோ தெரியாது.

நீதவான்:— எதிர் மனுதாருடன் மனுதாரின் அக்கா சினேகிதமாக இருந்தார் என்பதை நிரூபிக்க முடியுமா?

எதிர் மனுதாரின் வழ:— மனுதாரின் அக்கா எழுதிய கடிதங்கள் எதிர் மனுதாரிடம் இருக்கின்றன. அவரது புகைப்படத்தையும் அவர் கொடுத்த கைக்குட்டைகளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

மனுதார்:— நான் சத்தியம் செய்து கூறுவேன்; இவர் தான் என்னை அனுதையாக்கியவர் என்று. இவரிடம் இருப்பது அக்கா எழுதிய கடிதமல்ல, எனது கடிதங்களே. எனக்கு எழுத தெரியாமையினால் எனது கடிதங்களை அக்கா எழுதிக் கொடுத்தார். இதிலிருக்கும் சிக்கல் இதுதான்.

அக்டோபர் மாதம் 8-ம் திகதி மீண்டும் கோர்ட்டில் ஆஜராகுமாறு நீதவான் இருதரப்புக்கும் உத்தரவிட்டார். (ர)

## பாவற்குளத்தில் பொதுச் சந்தை

வவுனியா, ஜூலை, 18

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் என்னும் இடத்தில் சின்ன செட்டி குளம் கிராம சபையால் பொதுச் சந்தையொன்று நிறுவப்பட இருக்கின்றது. இதற்கு உள்ளூராட்சி அமைச்சு 15,000 ரூபா பணம் கொடுத்துள்ளதாகத் தெரிகின்றது. (24)

## கிணற்றில் விழுந்து சிறுவன் பலி

பேலியாகொடை, நுகரோட்டைச் சேர்ந்த கே. கே. வேலாயுதன் என்பவரின் 5 வயது மகனை வி. உதயகுமார் கிணற்றில் விழுந்து மரணமானன்.

இச்சிறுவனின் மரணம் பற்றி விசாரணை நடத்திய கொழும்பு மரண விசாரணையாளர் விபத்தால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். (ர)

## லொறி மரத்தில் மோதி ஒருவர் மரணம்

அனுராதபுரம், ஜூலை, 18

மிகிந்தலை கல்குளம் என்னும் இடத்தில் லொறி யொன்று பாதையை விட்டு விலகி, மரமொன்றில் மோதியதால் ஸ்தலத்திலேயே ஒருவர் மரணமடைந்தார். இரண்டு பேர் அனுராதபுரம் அரசாங்க வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (24)

## குடி நீரின்றி பெரும் அவதி

கந்தளாய், ஜூலை, 18

கந்தளாயிலும் அதனை அடுத்துள்ள குடியேற்றத் திட்டங்களிலும் வாழும் குடியேற்ற வாசிகளும் விவசாயிகளும் குடிக்க நீரின்றி பெரும் அவதியுறுகின்றனர்! (141)

## வாலிப துரைமார்களுக்கு தொழிலாளர்கள் 'விருந்து'

நாவலப்பிட்டி, ஜூலை. 18

கால்சட்டை வாலிபர்கள் தோட்டத் தொழிலாளர்களால் விரட்டியடிக்கப்பட்டனர். தெலிவத்தையில் ஆரம்பித்த கார் நாவலப்பிட்டியில் வந்து நின்றது.

இங்குள்ள வாலிபர்கள் சிலர் கொத்மலையை அடுத்த பத்தனை – தெலிவத்தைக்கு ஒரு தோட்ட உத்தியோகத்தரை சந்திக்கச் சென்றுள்ளனர். குறிப்பிட்ட நபரை சந்திக்க ஒருவர் மட்டும் செல்ல மற்ற மூவர் காரில் இருந்து இறங்கி குடிபோதையில் தொழிலாளர்களை ஏச சினமடைந்த தொழிலாளர்கள் மேற்படி கால்சட்டை வாலிபர்களைத் தாக்கியுள்ளனராம்.

தொழிலாளர் கூட்டத்தைக் கண்டு பயந்த வாலிபர்கள் காரில் ஏறி திரும்பிப்பார்க்காமல் நாவலப்பிட்டியை வந்தடைந்தனராம். (215)

## கதிர்காமத்தில் பக்தர் கூட்டம் பெருகுகின்றது

மாத்தறை, ஜூலை. 18

கதிர்காம உற்சவம் ஆரம்பித்திருப்பதோடு பெருந் தொகையான யாத்திரீகர்கள் கதிர்காமத்தில் குழுமி வருகின்றனர்.

மாத்தறையிலிருந்து கதிர்காமத்துக்கு விசேஷ இ. போ. ச. பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதோடு, ரயில் மூலம் வரும் யாத்திரீகர்களுக்காக மாத்தறையிலிருந்து 15 கடுகதி பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

கதிர்காமத்தில் கடமையாற்றுவதற்காக சுமார் 300 பொலீஸார் வந்து சேர்ந்துள்ளனர். தற்காலிக பொலீஸ் நிலையம் ஒன்றும் சுகாதார நிலையம் ஒன்றும் கதிர்காமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இம் மாதம் 29-ம் திகதி கதிர்காம உற்சவம் முடிவடையும். (ர)

## மனைவியை காப்பாற்றச் சென்ற கணவனும் மரணம்

தனது மனைவி உடலில் தீமூட்டிக் கொண்டு எமனுடன் போராடிக் கொண்டிருக்கையில் மனைவியைக் காப்பாற்றச் சென்ற கணவனும் தீயில் வெந்து மரணமானர்.

தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கணவன், மனைவி மரணமான ஒரு வாரத்தின் பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இறுதி மூச்சுவிட்ட சம்பவம் பெரியாஸ்பத்திரியில் நடைபெற்ற மரணவிசாரணையொன்றில் விபரிக்கப்பட்டது.

தாயினதும் தந்தையினதும் அகால மரணத்தால் அனாதையான அவர்களின் பிள்ளையான சித்தி ரிஸா என்னும் குழந்தையை பாட்டியிடம் ஒப்படைக்கும்படி மரண விசாரணையாளர் உறவினர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

30 வயதுடைய அப்துல் அகமது காதர் என்னும் இந் நபரின் மரணம் பற்றி விசாரணை நடத்திய மரண விசாரணையாளர் தீக்காயங்களால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். (ர)

## பஸ் நிலையத்தில் காரை நிறுத்தி ரூ. 50 அபராதம்

திருகோணமலை, ஜூலை, 18

திருகோணமலை பஸ் ஸ்டாண்டில் வாடகைக் காரை நிறுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட எஸ். சிவக்கொழுந்து என்பவருக்கு திருமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யூ. விக்ரமசேகரா ஐம்பது ரூபா அபராதம் விதித்தார். (287)


## மணிப்புரி சாரிகள்

"மணிப்புரி" சாதியைச் சேர்ந்த மிக விலை உயர்ந்த சாரிகளைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும். அழகான கண்கவர் சித்திர வேலைகளைக் கொண்ட இச் சாரிகள் நீங்கள் விரும்பும் எல்லா வர்ணங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும். கைதேர்ந்த சித்திரக் கலைஞர்களாலும், வல்லுநர்களாலும் இந்திய கலாபவனத்தில் நடாத்தப்பெற்ற சித்திரக் கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மனங்கவரும் சித்திர வேலைப்பாடுகளே இச்சாரிகளில் பொருந்தியுள்ளன.

**ஒரு சாரியின் விலை ரூபா 29-50 மாத்திரமே**

ஒவ்வொரு சாரியுடனும் ஒரு சட்டைத் துணியும் அனுப்பப்படும்.

இது சாயம் மாருது, நீண்ட காலம் பாவிப்பதோடு எந்தவொரு சலவைக்காரத்திற்கும் தரம்மாருதது. ஸ்திரிக்கை செய்ய வேண்டியதில்லை. இதன் அழகான தரமும், குன்றாத தோற்றமும் உங்கள் மேனியழகை மென்மேலும் அழகுறச் செய்கின்றது. எனவேதான் இதனைப் பிரபல நடிகைகளும் அணிகின்றார்கள். பிரசியர் அளவைத் தெரிவிக்கவும்.

பாடசாலைகளுக்கும் வேண்டிய உற்சவங்களுக்கும் ஏற்ற இந்த சாரியை வாங்குவதற்கு இன்றே நீங்கள் விரும்பும் நிறத்தைக் குறிப்பிட்டு ஒரு தபாலட்டை மூலம் தெரிவிக்கவும். வி. பி. பி. (V.P.P.) மூலம் அனுப்பிவைக்கப்படும்.

தயவு செய்து உங்கள் விலாசத்தை தெளிவாக எழுதுங்கள்.

THE MANAGER, ANESCO AGENCIES, (TH)
191/1, High Level Road. Kirillapone Colombo 6.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலனைத் தேடிச் சென்றவள் பஸ் நிலையத்தில் நஞ்சுண்டாள்

## 18 வயது யுவதியின் மரண விசாரணையில் தகவல்

நீர்கொழும்பு, ஜூலை 18

தன்னை விட்டுப் பிரிந்த காதலனைத் தேடிச் சென்ற ஒரு காதலி, அவனைக் கண்டு பிடிக்க முடியாது போனதால் மனமுடைந்து பஸ் நிலையத்தில் வைத்தே கிருமிநாசினி அருந்தி தன்னுயிர் மாய்த்துக் கொண்டாள்,

நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் நடைபெற்ற ஒரு மரண விசாரணையில் மேற்கூறிய தகவல் கூறப்பட்டது.

ராஜாங்கனையைச் சேர்ந்த சந்திரலதா என்னும் 18 வயது இளம் பெண்ணின் மரணம் பற்றி மரண விசாரணை அதிகாரி திரு. பீ. ஈ. குருணரத்ன விசாரணை நடத்தினார்.


மரண விசாரணையில் சாட்சியமளித்த மாண்ட யுவதியின் தாயான திருமதி டிங்கிரி மஹத்மீ (38) சாட்சியமளிக்கையில், தனது மகள் வாலிபன் ஒருவனுடன் தொடர்பு கொண்டிருந்தாள் என்றும், அவ்வாலிபன் தனது மகளை சுமார் ஒரு மாத காலம் கொண்டு சென்று வைத்திருந்து பின்னர் கொண்டு வந்து விட்டதாகவும், திரும்பி வருகிறேன் என்று சொல்லி விட்டுச் சென்றதாகவும் கூறினர்,

தொடர்ந்து சாட்சியமளித்த தாயார், 7 வாரங்களாகியும் அந்த வாலிபன் திரும்பாததால் தனது மகள் அவனைத் தேடிச் சென்றதாகவும், பின்னர் மகள் நஞ்சு குடித்ததாக தான் கேள்விப் பட்டதாகவும் கூறினர்.

தன் காதலனைத் தேடி நீர்கொழும்புக்கு வந்து அவனைக் காணாததால் மனமுடைந்து நீர்கொழும்பு பஸ் நிலையத்தில் பஸ் ஒன்றில் வைத்து நஞ்சு குடித்ததாக அப்பெண் இறப்பதற்கு முன்னர் பொலீஸுக்கு அளித்துள்ள வாக்கு மூலத்தில் கூறியிருப்பதாக விசாரணையில் கூறப்பட்டது.

தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

(ல)



இன்றிரவு சந்திர மண்டலத்துக்குச் செல்லும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் மைக்கல் கொலின்ஸ், நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் அல்ட்றின்,

# இவர் இழந்ததை பெற்றார்

கொழும்பு, ஜூலை. 19

கல்முனை தேர்தல் வழக்கு அப்பீலில் ஜனப். எம். ஸி. அகம்மது வெற்றியீட்டித் தமது எம். பி.பதவியை உறுதிப்படுத்திக் கொண்டார். மூன்று நீதியரசர்களைக் கொண்ட அப்பீல் நீதிமன்றம் ஜனப். அகம்மதுவின் அப்பீலை ஏற்று அவருக்குச் சாதமாகத் தீர்ப்பு அளித்தது. அவருக்கு செலவு தொகையும் வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பில் கூறப்பட்டு உள்ளது.

ஜனப் அகம்மதுவின் தெரிவை ஆட்சேபித்து கல்முனைக்குடி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த அரக்காளர் ஜனப் சாகுல் ஹமீது தாக்கல் செய்த வழக்கை விசாரித்த தேர்தல் நீதியரசர் திரு. ஒ. எல். டி. கிரெட்ஸர், ஜனப். அகம்மதுவின் தெரிவு செல்லுபடியாகாது என்று தீர்ப்பு அளித்தது தெரிந்ததே.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்தே ஜனப். அகம்மது அப்பீல் செய்தார்.

அந்த அப்பீலை நீதியரசர்கள் திரு. ஏ. எல். சிறிமானே, திரு. ஏ.சி. ஜீ. அலெஸ், திரு. ஜி. டி. சமரவிக்கிரமா ஆகியோரைக் கொண்ட அப்பீல் நீதிமன்றம் இன்று ஏற்றுக் கொண்டு தேர்தல் நீதியரசர் முன்னர் வழங்கிய தீர்ப்பை மாற்றி அமைத்தது.

மூன்று நீதியரசர்களும் தனித் தனியே தீர்ப்பு எழுதி இருந்தார்கள். அந்தத் தீர்ப்புகள் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டன.

ஜனப். எம். ஸி. அகம்மது ஆள் மாருட்டத்துக்கு உடந்தையாக இருந்தார் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று



ஜனப் எம்- ஸி- அகம்மது

நீதியரசர் ஏ. சி. அலெஸ் தமது தீர்ப்பில் கூறினர்.

ஜனப். சினி முகம்மது ஹாஜியாரின் காலஞ்சென்ற மனைவி அவ்வா உம்மாவின் பெயரிலும், ஜனப். முகம்மது ஹுசேனின் மனைவி ரவியத்தும்மாவின் பெயரிலும் ஆள் மாருட்டம் செய்யப்பட்டது என்றும் அதற்கு ஜனப். அகம்மது உடந்தையாக இருந்தார் என்றும் குற்றம் சாட்டி ஜனப் சாகுல் ஹமீது வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

# யாழ். நகரில் உபவானொலி நிலையம் நிறுவ கோரிக்கை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உப-நிலையம் ஒன்று இங்கு நிறுவப்படுவது வடபகுதி மக்களுக்கு மிக அவசியமானதாகும்.

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை யாழ்ப்பாண மாநகரசபை மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. பிரஸ்தாப கூட்டத்திற்கு நகரபிதா திரு. எஸ். நாகராஜா தலைமை தாங்கினர்,

உப வானொலி நிலையம் ஒன்று யாழ். நகரில் நிறுவப்பட வேண்டும் என்ற பிரேரணையை சபையில் சமர்ப்பித்துப் பேசிய திரு. டி. கந்தையா, "முன்னர் வாக்களித்தபடி யாழ்ப்பாணத்தில் ஒரு உப-வானொலி நிலையத்தை உடனடியாக நிறுவுமாறு அரசாங்கத்தை நாம் வலியுறுத்த வேண்டும். இவ்விஷயத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் ஒன்றுபட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மாநகர சபையின் மற்றோர் உறுப்பினரான திரு. எஸ். ஜே. அன்டனி, "இந்நாட்டில் சிங்கள, தமிழ் மக்கள் சம அந்தஸ்தில், ஒருவருக்கு ஒருவர் அடிமையில்லாமல் வாழ வேண்டும்" என்று கோரும் பிரேரணையை சமர்ப்பித்தார். இப்பிரேரணையும் சபையில் நிறைவேறியது.

# தோழனையும் கூட அழைத்து காதலியுடன் உல்லாசபயணம்

"வாதியான யுவதி உல்லாசப் பயணம் ஒன்றுக்கு செல்ல காதலனைக் கூப்பிட்ட போது காதலன் நண்பன் ஒருவரையும் தனது பாதுகாப்புக்காக கூட்டிச் சென்றதோடு இம்மூவரும் உல்லாசமாக பொழுது போக்கும் போது பொலீஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர்-"

வயது வராத ஒரு யுவதியைக் கடத்திச் சென்ற சம்பவம் சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் எதிரித் தரப்பு வழக்கறிஞர் இவ்வாறு தெரிவித்தார்.

மஹரகமையைச் சேர்ந்த 15 வயதுடைய வினிதா பத்மினி என்னும் யுவதியை பலவந்தமாக கடத்திச் சென்றதாக எஸ். மகிந்த பெரேரா, சுனில் ஜயகொடி ஆகிய இரு வாலிபர்கள் சந்தேகத்தின் பேரில் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

தென் கொழும்பு மேலதிக நீதவான் முன் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது கனேமுல்லையில் ஒரு இடத்திலிருந்து இம்மூவரும், யுவதியின் பெற்றோரின் முறைப்பாட்டை அடுத்து கைது செய்யப்பட்டதாகவும் விசாரணையின் போது வாலிபர்களில் ஒருவர் யுவதியின் காதலன் எனத் தெரிய வந்ததாகவும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எதிரித்தரப்பு வழக்கறிஞர் விளக்கம் கூறியதை அடுத்து நீதவான் மேல் விசாரணையை செப்டெம்பர் மாதம் 10-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(ர)

## றப்பர் விலை

ஏற்றுமதியாளருக்கு

| | |
|---|---|
| ஆர். எஸ். எஸ். நிர். 1 | 110 |
| ஆர். எஸ். எஸ். நிர். 2 | 105¾ |
| ஆர். எஸ். எஸ். நிர். 3 | 103½ |
| ஆர். எஸ். எஸ். நிர். 4 | 102 |

கொள்ளுப்பிட்டி டிப்போவில்

| | |
|---|---|
| ஆர். எஸ். எஸ். நிர். 1 | 109 |
| ஆர். எஸ். எஸ். நிர். 2 | 104¾ |
| ஆர். எஸ். எஸ். நிர். 3 | 102½ |
| ஆர். எஸ். எஸ். நிர். 4 | 101 |
| ஆர். எஸ். எஸ். நிர். 5 | 94½ |

# கிராம சேவகர் மாற்றத்தில் எம்.பி.கள் தலையீடு கூடாது

கிராம சேவையாளர்களின் இடமாற்றத்தில் தலையிட வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர்களைக் கோரும் தீர்மானம் யாழ்ப்பாணம் மாவட்ட கிராம சேவையாளர்களின் சங்கத்தின் ஆறுவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:— யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நியமிக்கப்படும் கிராம சேவையாளர்கள் தமிழ் பகுதிகளில் சேவையாற்றுவதற்கு என்று திரட்டப்படுவதால் சிங்கள மொழித் தேர்ச்சியில் இருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். அல்லது அதற்குப் பதிலாக ஐந்தாம்தர சிங்களத் தேர்ச்சி அவசியம் என்பதை மூன்றும் தர சிங்களத் தேர்ச்சியாக மாற்ற வேண்டும்.

கிராம சேவையாளர்கள் 24 மணி நேரமும் வேலை செய்ய வேண்டியிருப்பதால், ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு இருக்கும் சலுகையைப் போல் சிங்கள வகுப்புகளில் கலந்து கொள்ள முடியாமல் இருக்கின்றனர், எனவே சிங்களத்தில் தேர்ச்சி அடைவதற்காக சம்பளத்துடன் ஒன்பது மாத படிப்பு லீவு கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

மூன்று வருடங்கள் திருப்தியாக சேவையாற்றிய கிராம சேவையாளர்கள், சிங்களத் தேர்ச்சி நிபந்தனை வலியுறுத்தப்படாமல் சேவையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்;

எல்லா கிராம சேவையாளர்களுக்கும் பைசிக்கிள் அலவன்ஸ், வீட்டு வாடகை, விபத்து, மரண நஷ்ட ஈடு ஆகியவை வழங்கப்பட வேண்டும்.

உத்தியோகத்தர் தெரிவு வருமாறு:— தலைவர்: திரு. எஸ். செபஸ்தியான்பிள்ளை, உப-தலைவர்கள்: திரு. வி. பொன்னம்பலம், திரு. தே. ராமச்சந்திரா, செயலாளர்: திரு. கே. துரைசிங்கம், உப-செயலாளர்கள்: திரு. டி. தமலநாதன், திரு. ஏ. நடராஜா, பொருளாளர்: திரு. எஸ். வேதராஜா.

(ர)




உங்கள் பிரச்சினை எதுவானாலும் இன்றே என்னைச் சந்தியுங்கள் அல்லது விபரங்களுக்கு எழுதுங்கள்.

அரசாங்க பதிவு செய்யப்பட்ட மாந்திரீக வைத்திய நிபுணர், நாலு மகா தேவாலய தர்மகர்த்தா.

தொலைபேசி எண்:
கொழும்பு - 33955
கம்பளை - 454

**பி. எம். திஸ்ஸாநாயக்க,**

103, ஸ்ரீ சங்கராஜமாவத்தை, மருதானை - கொழும்பு - 10,
த. பெ. எண்: 1281 — கொழும்பு


இப்பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை)- வெளியிட்ட திகதி 19 ஜூலை 1969. Colombo 12.
Thanthi 5, Gunasena Mawatha,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org